# அறிவித்தல்

## இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் தலைமைத்துவ அபிவிருத்திக்கான தேசிய நிலையத்தின் ஆரம்ப நிலை திறன் சாராத சேவை வகுதியின் பணி உதவியாளர் (திணைக்கள மயப்படுத்தப்பட்ட) 07 பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

01. **பதவி** : பணி உதவியாளர் (திணைக்கள மயப்படுத்தப்பட்ட)

02. **பதவியின் தன்மை** : நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதாகும். (ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை அடிப்படையிலான தீர்மானத்திற்கு உட்படுதல் வேண்டும்)

03. **சேவை வகுதி** : ஆரம்ப நிலை திறன் சாராத சேவை வகுதி (PL 01 – 2025)

04. **சம்பள அளவுத் திட்டம்** : ரூ. 40,000-10x450-10x490-10x540-12x590-61,880/-

05. **கல்வித் தகைமைகள்** : கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

06. **உடற் தகைமைகள்** : விண்ணப்பதாரி நன் நடத்தையுடையவராகவும், சிறந்த ஆரோக்கியமுடையராவும் இருத்தல் வேண்டும்.

07. **வயது** : விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் பணியாற்றுகின்ற நிரந்தரம் மற்றும் ஓய்வூதிய உரித்துடைய நியமனதாரிகளுக்கு உச்சளவு வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

08. **ஆட்சேர்த்துக்கொள்ளும் முறை** : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஊடாக

09. **ஆட்சேர்த்துக்கொள்ளும் தரம்** : பணி உதவியாளர் தரம் - iii இற்கு மாத்திரம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரது அங்கீகாரத்தின் அடிப்படையில் விண்ணப்பதாரிகளின் அடிப்படைத் தகைமைகளை பரீட்சிக்கும் தினத்திலேயே நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளுகின்ற புள்ளிகளின் திறமை வரிசையைப் பின்பற்றி தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் பணி உதவியாளர் தரம் - iii இற்கு நியமிக்கப்படுவார்கள்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள் | உச்சளவு புள்ளிகள் |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| தொடர்புடைய துறை பற்றிய அறிவு | 35 |
| தொழில் தகைமைகள் | 20 |
| அனுபவம் | 20 |
| நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கும் திறமை | 05 |
| மொத்தம் | 100 |

10. **பணியிலீடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்:**

10.1 இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் விண்ணப்பதாரி ஓய்வு பெறும் வரை இந்த நிலையத்தில் பணியாற்றுதல் வேண்டும்.

10.2 சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

10.3 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய திறமை அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படுவார்கள்.

10.4 தலைமைத்துவ அபிவிருத்திக்கான தேசிய நிலையத்தின் ஆரம்ப நிலை திறன் சாராத சேவை வகுதியின் பணி உதவியாளர் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 07 ஆகும். நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். குறிப்பிட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையை நிரப்புவதற்கு அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாதிருப்பதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

10.5 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் கோவையின் ஏ ஆவது அத்தியாயத்திற்கமைய அரசாங்க சேவையில் நியமிக்கப்படுவதற்கான தகைமையீனத்தைக் கொண்டிராதவராக இருத்தல் வேண்டும்.

11. **விண்ணப்பிக்கும் முறை:**

11.1 A4 அளவிலான தாளினைப் பயன்படுத்தி இத்துடன் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவானதாக இல்லாத மற்றும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

11.2 விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக பணி உதவியாளர் தரம் - iii இற்கு ஆட்சேர்த்துக்கொள்ளல் எனக் குறிப்பிடவும்.

11.3 உரிய பிரகாரம் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை கீழ் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர், பணிப்பாளர், தலைமைத்துவ அபிவிருத்திக்கான தேசிய நிலையம், யோதகம, எம்பிலிப்பிட்டிய எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

11.4 விண்ணப்பங்கள் கையேற்கப்படும் இறுதித்திகதி : 2026.04.07

11.5 இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பித்திருப்பின் மாத்திரம் இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். ஆனாலும் அவ்வாறு அழைத்தலானது விண்ணப்பதாரி இந்தப் பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்தமைக்கான அங்கீகாரமாக கருதப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைக் கொண்டுள்ளார்களாவென பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் இந்த அறிவித்தலுக்கமைய தேவையான தகைமைகளைக் கொண்டிராதவரென தெரியவரும் பட்சத்தில் குறித்த விண்ணப்பதாரியின் விண்ணப்பதாரி நிலைமை இரத்துச் செய்யப்படும்.

11.6 இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் இருப்பின் அது தொடர்பாக இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரால் தீர்மானிக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான சட்ட விதிகளுக்கிணங்க நடவடிக்கை மேற்கொள்வதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளனர்.

**ஏ.எச்.எம்.யூ.அருண பண்டார**
**செயலாளர்,**
**இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு.**